# LAABH SAMACHAR

Volume: 11 Issue : 06 SEPTEMBER 2022 Tamil & English Monthly Price: Rs. 10/-
official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE

To







அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


TEXMO
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles


பர்வதா டிரேடர்ஸ்
செல்: 94439 30728
Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available
37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014


உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?
உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
கடின உடற்பயிற்சி இல்லாமல்.
பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க
ஆலோசனை பெற அணுகவும்
L.N.R. தாமோதரன் - 98431 71477

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

## நமஸ்கார்...

நடைபெறும் இந்த நிர்வாகம், கடந்த மூன்றாண்டுகளில் நம் சேம்பர் உறுப்பினர்களின் தொழில் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, கொரோனாவின் அச்சுறுத்தும் சூழலில் கூட இணைய வழியில் தொடர்ந்து இயங்கி, தொழிலில் ஏற்படும் நிதி நெருக்கடிகளை சமாளிக்க மத்திய, மாநில அரசுகளை கடிதம் அனுப்பியும், அமைச்சர்களை நேரில் சந்தித்தும் அங்கத்தினர்களின் தொழில் நலனில் அக்கறைகொண்டு திறம்பட செயல்பட்டது. தவிற, ஜி.எஸ்.டி., பிரச்சனைகள், மின்சாரப் பிரச்சனைகள் போன்றவைகளுக்கு தீர்வுகாணும் பணிகளையும் மேற்கொண்டது என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

ராஷ்ட்ரபந்து ஸ்ரீ. எல்.கே. துளசிராம் அவர்கள் முயற்சியால் உருவான, ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி மேம்பாட்டிற்காக, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், சமூக முக்கியப் பிரமுகர்களிடமிருந்து ரூ. 55 லட்சம் வரை நிதியை திரட்டிக்கொடுத்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சி.எஸ்.ஆர். நிதியின் மூலமாக, ரூ. 3 லட்சத்தை மதுரை தெப்பக்குளத்தில் உள்ள ஸ்ரீமந் நாயகி வித்யா மந்திர் பள்ளி மேம்பாட்டிற்காக, சமீபத்தில் நடைபெற்ற சிட்கான் மாநாட்டின் மேடையில் அளித்துள்ளது.

இவ்வாறு பல்வேறு பணிகளை, நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன், நடைபெறும் இந்த நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிர்வாகம் நிறைவான கட்டத்தை எட்டியுள்ளது. வரும் 25.09.2022 அன்று பொதுக்குழு கூட்டத்தில் பொறுப்பேற்கும் புதிய நிர்வாகத்திற்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, கடந்த மூன்றாண்டுகளில் எனது பணியை சிறப்பாக ஆற்றியிருக்கிறேன் என்ற நம்பிக்கையில் விடைபெறுகிறேன். நன்றி.

– குமரன் B ஜகுவா


**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc.,
**93441 97952**

# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

**15.08.2022** – பாரத தேசத்தின் 76வது சுதந்திர தின விழா – 75வது சுதந்திரப் பெருவிழாவை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கொண்டாடியது. காலை 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். விழாவில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக Ex-Naib / Subedhar T.R. **ராஜசேகரன்** Junior Commissioned Officer அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. சரவணன் அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

**22.08.2022** – சேம்பர் உறுப்பினர் திரு. விஜயபிரகாஷ் அவர்களின் அன்னபூரணி கேட்டரிங் கிளை திறப்பு விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

**24.08.2022** – போஷக அங்கத்தினர் திரு L.G. பத்மநாபய்யர் அவர்களின் புதுமனை புகுவிழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

**28.08.2022** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. K.Ve. நாகராஜன் அவர்களின் இல்ல விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

**31.08.2022** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் Dr. M.S. கார்த்திக் அவர்களின் இல்ல விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

**01.09.2022** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. T.K. கோபிநாத் அவர்களின் சாரதி டெக்ஸ்டைல் கிளை திறப்பு விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

**01.09.2022** – அசாதாரணப் பொதுக்குழு கூட்டம் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்தில் சில முக்கிய விதி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

**04.09.2022** – சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. T.K. சிவக்குமார் அவர்களின் இல்ல விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

**06.09.2022** – **Data Science and Business Analytics** தலைப்பிலான கூட்டம் மாலை 6.30 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. **நடராஜ் B,** Assistant Professor, Chairperson MDP, Thiagarajar School of Management அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**07.09.2022** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. R.H. முருகன் அவர்களின் இல்ல விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

**09.09.2022** – தமிழக வணிக வரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்களின் இல்ல விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

வருகின்ற செப். 25ம் தேதி அன்று காலை 10 மணிக்கு, நம் சேம்பர் அரங்கில் 15ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற இருக்கிறது. சேம்பர் அங்கத்தினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறோம். இந்த கூட்டத்தில் புதிய நிர்வாகத் தேர்வு நடைபெறுகிறது.

இரண்டு ஆண்டுகள் நடைபெற வேண்டிய நிர்வாகம் கொரோனா காரணமாக அனைவரின் ஒப்புதலுடன் ஓராண்டு நீட்டிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் இந்த நிர்வாகம் செயல்பட்டுள்ளது.

ஒரு பொதுச் செயலாளராக எனது பணியை தங்கள் அனைவரின் நல்லாதரவுடன், சீராகவும், சிறப்பாகவும் ஆற்றியிருக்கிறேன் என்று நம்புகிறேன். முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தும், புதிய நிர்வாகத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

- K.K. தினேஷ்


Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear · ANAND · Viking · Prithvi INNER WEARS · NAIDU HALL · JOCKEY INNER WEAR · Poomex · MANGAI NIGHTIES · RASATHE · YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

நன்றி
THE BABY SHOP
ஸ்ரீ அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402


INDUS FINANCE LTD
A RBI Registered BSE listed NBFC
Head Office - Kothari Buildings, 4th Floor, No. 114 M G Road,
Nungambakkam, Chennai - 600 034. T: 044 - 28331310
E: contact@indusfinance.in W: www.indusfinance.in
BVK GROUP
Contact us for
All Your Financial needs*
Property Loans
MSME Loans
Education Loans
Business Loans
Vehicle Loans
Life Insurance Policy Loans
Rental Discounting
For More Details contact
Mr.Kannappan V
M : 94440 51147
* Conditions apply
Home Loan
HOME

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

இதழ் குழுவின் சேர்மன்-ஆக 2019-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கிய எனது பயணம் 2022ம் ஆண்டு செப்டம்பர் வரை 38 மலர் வெளி வர வாய்ப்பளித்த சேம்பர் நிர்வாகத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலத்திற்கேற்ப மாற்றம் ஏற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். அச்சிடப்பட்டு வந்துகொண்டிருந்த இதழானது, பெருந்தொற்று காலத்தில் மின் புத்தகமாக வெளியிட, அவ்வழக்கமே இன்று வரை தொடர்கிறது. இனியும் தொடரும்.

மதுரை மக்களை மட்டும் அறிமுகப்படுத்தி வந்த நிலையில், லாப் ஸமாச்சார் இதழில் முதன்முதலாக வெளியூர் வாழ் நம் சமூக வியாபார மக்கள், சாதனையாளர்களை அடையாளம் கண்டு நேர்காணல் செய்து நமது இதழில் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

கடந்த 3 ஆண்டுகளாக லாப் ஸமாச்சார் இதழில் விளம்பரம் கொடுத்து வரும் அனைத்து வியாபார நிறுவனங்களுக்கும் இந்நேரத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

இந்த 3 ஆண்டு காலத்தில் இதழுக்காக பணியாற்றிய அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். குறிப்பாக இதழ் குழுவில் ஒரு அங்கமாக நம்முடன் தொடர்ந்து இணைந்து பணியாற்றிய மரு. A.R. கணேசன் அவர்களுக்கு நன்றிகள் பல...

இதழ்குழுவில் இருக்கும் திரு. S.S. ராம்சுந்தர், திரு. K.S. சிவக்குமார் அவர்களுக்கும் எனது நன்றிகள். சிட்கான் 2022 இதழ்குழுவில் அங்கம் வகித்து அனைவர் இல்லங்களிலும், உள்ளங்களிலும் மனம் வீச அரும்பாடுபட்ட அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

- B.S. ஜெனார்த்தனன்

## லாப் ஸமாச்சார் & சிட்கான் 2022 மலர் குழுவினர்கள்




**Sowndarya Traders**

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
- FANCY CURTAIN CLOTHS
- BABY - PRODUCTS
- PILLOWS, BEDS
- BOLSTERS
- CUSHIONS
- QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care



## PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrance Pvt. Ltd



K K Dinakaran

www.pandiansurfactants.com / www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831




நம் பாரத தேசத்தின் 76வது சுதந்திர தின விழா, 75 ஆண்டுகால சுதந்திரத்தின் நிறைவை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்களுடன் கொண்டாடியது. தேசியக்கொடியை சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் காலை 8.30 மணிக்கு ஏற்றினார். உடன் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். சுதந்திர தின விழாவிற்கு சிறப்பு விருந்தினராக Ex-Naib / Subedhar **T.R. ராஜசேகரன்** Junior Commissioned Officer அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அவர் தனது உரையில், தாம் ராணுவ வீரராக போர்க்களத்தில் பணியாற்றிய அனுபவத்தை நம்மிடம் பகிர்ந்து கொண்டார். தமது சுவாரசியமான அனுபவங்களைக் கூறி கலந்து கொண்ட அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தார். போர்க்களத்தில் எதிரிகளை கையாளும் விதம், தொழில்நுட்பம் வீரர்களின் நெறிமுறைகள் என பல்வேறு தகவல்களைக் கூறி நெகிழ்ச்சியடைச் செய்தார். முக்கியமாக, தற்போது ராணுவத்தில் இளைஞர்களை குறுகிய காலத்திற்கு ராணுவத்தில் சேர்ப்பதற்கான **அக்னிபத்** திட்டம் பற்றி மிக அருமையாக கூறினார். ஏன் குறுகிய காலத்திற்கு இளைஞர்களை ராணுவத்தில் சேர்க்கிறார்கள் என்கிற காரணத்தை பற்றி மிகத் தெளிவாகக் கூறினார். இதனை அனைவரும் வரவேற்க வேண்டிய திட்டம் என்றும் தெரிவித்தார். மேலும், தற்போது, இந்த அக்னிபத் திட்டத்தில் ஆண் ராணுவ வீரர்களை சேர்க்கும் பணி முடிந்து தற்போது, பெண் ராணுவ வீரர்களுக்கான சேர்க்கை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். ராணுவத்தில் பயிற்சி பெறும் நபர்கள் தமது சொந்த வாழ்க்கையிலும் நெறிமுறைகளை கடைப்பிடிக்கத் தவற மாட்டார்கள். இந்த நான்கு ஆண்டு குறுகிய காலத்தில் பாரத அன்னைக்காக போராடினோம் என்கிற பெருமிதமும் கொள்ளலாம். நான்கு ஆண்டு நிறைவுக்குப்பின் தகுதியுடையவர்கள் ராணுவத்தில் தொடரலாம். திரும்பியவர்களுக்கு நாட்டில், முன்னணி நிறுவனங்கள், முன்னுரிமையுடன் பல்வேறு தொழில் வாய்ப்புகளை அளிக்கக் காத்திருக்கின்றன. பாரத தேசத்திற்காக எல்லையில் போராட விரும்பும் இன்றைய இளைஞர்களுக்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு என்று தெரிவித்து உரையை நிறைவு செய்தார். அவரை நமது சேம்பர் நினைவுப்பரிசளித்து கௌரவித்தது.



Dr. S.S.Siva Prasath B.D.S., FGDS.



# Siva Dental Care

## TYPES OF DENTAL CARE

- Rct
- Orthodontics
- Dental Implants
- Dentures
- Dental Surgery
- Cosmetic Dentistry
- Oral Hygiene
- Periodontology

தினசரி காலை 10.00 to 2.00 மணி ★ மாலை 5.30 - 9.00 மணி

243-A, Kamarajar Salai, Near Alankar Theatre, Madurai - 625 009.
Contact : 86086 66642 E-mail : svprsth@gmail.com




## SCC Program on
# DATA SCIENCE AND BUSINESS ANALYTICS

நமது தொழிலை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல இன்று தகவல் தொழில்நுட்பம் இன்றியமையாததாக ஆகிவிட்டது. இதன் அவசியத்தை புரிந்துகொள்ளாதவர்கள், தங்கள் தொழிலை வளர்ச்சிப்பாதையில் இனி வரும் காலங்களில் கொண்டுசெல்ல இயலாத சூழலுக்குத் தள்ளப்படும் நிலை ஏற்படும். ஆகவே, இதன் முக்கியத்துவத்தை நமது சேம்பர் தொழில் முனைவோர்கள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக **Data Science and Business Analytics** என்கிற தலைப்பில், கடந்த 06.09.2022 அன்று மாலை 6.30 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடத்தப்பட்டது.

இந்த கூட்டம், ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் நடப்பு நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இறுதி மாதாந்திர கூட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. **நடராஜ் B,** Assistant Professor, Chairperson MDP, Thiagarajar School of Management அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R.மோகன்ராம் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. சரவணன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. நடராஜ் B. அவர்கள், தொழில் துறை பல்வேறு கால நிலைகளில் நிகழ்ந்த மாற்றங்களை ஒளித்திரையின் மூலமாக காண்பித்து விளக்கினார். தற்போது நடைபெறும் 21ம் நூற்றாண்டில் ஒரு நிறுவனம் முன்னோக்கி நகர தரவுகள் (Data) அவசியம் ஆகிறது.

வெவ்வேறு காலகட்டங்களில் தொழில் புரட்சிகள் மாறுபட்டுள்ளன. இதுவரையில், தகவல்புரட்சியாக இருந்த தொழிற்சூழலில் போதுமான அறிவும், திறனும் தேவைப்பட்டது. தற்போது இணைப்புப்புரட்சியாக / அறிவுப்புரட்சியாக பயணிக்க தயாராகிவிட்டது. ஆகவே, இங்கு அறிவாற்றல், படைப்பாற்றல், சீரிய ஆர்வம், எதையும் தழுவும் ஆற்றல் ஆகியவை அவசியமாகின்றன. ஒரு வீட்டைக்கட்ட தேவையான கல், மண் போன்ற பொருட்களை தேடி சேகரித்தப்பிறகு, அடுத்த நிலையில் இவைகளை சரியான திட்டமிடலுடன் மிக நேர்த்தியாக ஒருங்கிணைத்து கட்டமைத்துவிட்டால் சுகமாக வாழலாம் என்பது போல, இன்றைய தொழிலிலுக்குத் தேவையான தரவுகளைக் கொண்டு அடுத்தகட்டத்திற்கு கட்டமைக்கத் தேவையான அறிவும், ஆற்றலும் பெற்றுவிட்டால் நமது தொழில் வளர்ச்சியை நோக்கி தொடர்ந்து பயணிக்கும் என்பதே ஆகும் என்று மிக அருமையாகக் கூறினார்.

மேற்கூறிய மாற்றத்தை எதிர்கொள்ள தொழில்நுட்பம் மிகவும் பயனுள்ளதாக கருதப்படுகிற காரணத்தால், தொழில் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாக உருவெடுத்துள்ளது. Articifal Intelligence and Machine Learning / Blockchain / Cloud Computing / Deep Learning with Neural Networks போன்றவை நம் தொழிலின் வளர்ச்சிக்கான கருவிகளாக கருதப்படுகின்றன. இவைகளே நம் தொழிலை நேர்த்தியாக கொண்டு செல்ல முக்கிய பங்கு வகிக்க இருக்கின்றன. ஆகவே, இதனை கருத்தில்கொண்டு நம் அடுத்தகட்ட நகர்வை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி நிறைவு செய்தார். கூட்டத்தில் பங்கேற்ற அங்கத்தினர்கள் பலருக்கு இந்த கூட்டம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

நமது சேம்பர் சிறப்பு விருந்தினரை நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தது. நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் நிறைவு பெற்றது.




VEDHAVALLI HOLIDAYS

**வேதவல்லி ஹாலிடேஸ்**

காமராஜர் சாலை, மதுரை | வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

# Universal Pension Scheme

## New EPFO scheme may cover unorganised workers




The Employees' Provident Fund Organisation (EPFO) may extend its pension scheme to workers from both organised and unorganised sectors, irrespective of their monthly income, the Financial Express reported.

The proposed scheme is likely to be based on individual contribution. The government, through this scheme, seeks to ensure a minimum pension of Rs 3,000 a month after reaching 60 years of age to each worker.

The new scheme, likely to be called Universal Pension Scheme (UPS), intends to fix the existing lacunas in the current Employees' Pension Scheme (EPS), like no coverage for employees earning above Rs 15,000 a month, a meagre pension amount for the existing subscribers. Currently, the EPS does not cover sections of workers within the organised, unorganised/self-employed workforce.

If the scheme gets the required approval, the unorganised sector workers will have to put in a fixed amount with a flexibility of making voluntary payments.

The new universal pension scheme also plans to include superannuation pension, widow pension, children pension and disability pension. However, It may increase the minimum qualifying period of service for pension benefit to 15 years from the existing period of 10 years. Also, the new scheme will provide pension to the family if a member dies before the age of 60 years.

"The minimum accumulation of approx. Rs 5.4 lakh is required for a minimum of Rs 3,000 pension per month. Members can choose to contribute more voluntarily and accumulate significantly larger amount for a higher pension," an ad-hoc committee, set up by the Central Board of Trustees (CBT), said.

At present, for workers earning up to Rs 15,000 a month in organisations with more than 20 employees contribution to EPF is mandatory. An individual employee is required to contribute 12 per cent of their basic salary into the EPF scheme. The employer too is required to contribute the same.

Currently, from the employers' contribution, 8.33 per cent is deposited in the pension scheme subject to a cap of Rs 1,250 per month based on the salary cap of Rs 15,000 per month. This money goes into the pension pool without any extra interest. A monthly pension, derived from a set formula is paid post retirement to the subscriber.

Also, the organised sector workers will be required to contribute a certain percentage of wages (so that when wages grow, the contribution to the fund increases) under the new scheme.

Adding to this the new scheme is also likely to introduce an interface for seamless and easy switching between formal and informal employment.

"The final in the form of a pension is contingent on the earnings on the fund during the accumulation phase. The committee discussed that since the pension funds would be locked in for the long-term, a lightly different investment strategy would be required that what is being followed for a provident fund where the investment horizon is much shorter," the EPFO said.


Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

# கடன் அளித்தல்

# தொழிலில் உள்ள நன்மைகள் மற்றும் தீமைகள்

அனைத்து வணிகங்களும் ஒரு போட்டி சூழலில் உள்ளன. எல்லா விற்பனையையும் பண அடிப்படையில் செய்வது நல்லது என்றாலும் அது எப்போதும் சாத்தியமில்லை. உங்கள் போட்டியாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு கடன் விதிமுறைகளை வழங்கினால், அவர்களின் வணிகத்தைப் பெறுவதற்கு இதே போன்ற ஒன்றை நீங்கள் வழங்க வேண்டும். கடனில் வாடிக்கையாளர்களுக்கு விற்பதில் நன்மைகள் மற்றும் தீமைகள் உள்ளன. வாடிக்கையாளர்களுடன் கடன் அபாயங்களை எடுத்துக்கொள்வதற்கான சாத்தியமான கண்ணிவெடிகளுக்குள் நுழைவதற்கு முன், ஒரு வணிக உரிமையாளர் தனது நிறுவனத்தில் ஏற்படும் விளைவுகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

**இதில் உள்ள நன்மைகளைப் பார்ப்போம்.**

**1. போட்டியை சந்தித்தல்:** உங்கள் போட்டியாளர்கள் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு கடன் வாங்கி விற்பனை செய்யும்போது, போட்டித்தன்மையுடன் இருக்க நீங்கள் அதையே செய்ய வேண்டும். நீங்கள் மிகவும் சாதகமான விதிமுறைகளை வழங்க விரும்பினால், உடனடியாக பணம் செலுத்துவதற்கு தள்ளுபடி வழங்குவதை நீங்கள் பரிசீலிக்கலாம். எடுத்துக்காட்டாக, 30-நாள் விதிமுறைகளை வழங்குவதற்குப் பதிலாக, 02/10/30 என வழங்கவும். அதாவது, வாடிக்கையாளர்கள் முழு 30 நாட்களுக்குள் பணம் செலுத்துவதற்குப் பதிலாக 10 நாட்களுக்குள் செலுத்தினால் 2 சதவீதம் தள்ளுபடி பெறலாம்.

**2. விற்பனை அதிகரிப்பு:** நீங்கள் கடனில் விற்கத் தொடங்கும் போது விற்பனையில் அதிகரிப்பு ஏற்படலாம் அல்லது நடக்காமல் போகலாம். உங்கள் போட்டியாளர்கள் கடன் விதிமுறைகளை வழங்கவில்லை என்றால், கடன் விதிமுறைகளை வழங்குவதன் மூலம் நீங்கள் விற்பனையைப் பெறுவீர்கள். ஏனெனில் உங்கள் வாடிக்கையாளர்கள் உங்கள் போட்டியாளர்களிடமிருந்து பணத்தை செலுத்துவதற்குப் பதிலாக உங்களிடமருந்து வாங்குவார்கள்.

**3. சிறந்த வாடிக்கையாளர் விசுவாசம்:** வாடிக்கையாளர்களுக்குக் கிரெடிட்டை வழங்குவது என்பது, அவர்கள் செலுத்த வேண்டிய தேதிகளுக்கு முன்பாக அவர்களின் பில்களைச் செலுத்துவதற்கு நீங்கள் அவர்களை மதிக்கிறீர்கள் மற்றும் நம்புகிறீர்கள் என்பதைக் குறிக்கிறது. உங்களிடமிருந்து தொடர்ந்து வாங்குவதன் மூலம் வாடிக்கையாளர்கள் இந்த நம்பிக்கையின் சைகைகளுக்கு வெகுமதி அளிப்பார்கள். அவர்கள் ஒருவித விசுவாசத்தை உணருவார்கள். மேலும் அவர்களை நம்பும் ஒருவருடன் வியாபாரம் செய்ய விரும்புவார்கள்.

**குறைபாடுகள்:**

**பணப்புழக்கத்தில் எதிர்மறை தாக்கம்:** நீங்கள் கடனில் வாடிக்கையாளர்களுக்கு விற்கத் தொடங்கினால், உங்கள் பணப்புழக்கம் உடனடியாக பாதிக்கப்படும். எடுத்துக்காட்டாக, நீங்கள் 30 நாட்களுக்கு கடன் விதிமுறைகளை வழங்கத் தொடங்கினால், இந்த நேரத்தில் நீங்கள் வழக்கமாகப் பெறும் பணம் மறைந்துவிடும். உங்களின் பில்கள், பணியாளர் மற்றும் சப்ளையர்களுக்குச் செலுத்த இந்தப் பணம் உங்களிடம் இருக்காது.

**பெறத்தக்க கணக்குகளுக்கு நிதி தேவை:** வாடிக்கையாளர்களுக்கு கிரெடிட் விதிமுறைகளை வழங்குவது உங்கள் பணப்புழக்கத்தை நேரடியாக பாதிக்கும் என்பதால், உங்கள் பெறத்தக்க கணக்குகள் எவ்வளவு அதிகரிக்கும் என்பதை நீங்கள் கணக்கிட வேண்டும். நீங்கள் ஒரு வங்கியில் கடன் வரியைப் பயன்படுத்த வேண்டியிருக்கலாம் அல்லது உங்கள் நிறுவனத்திற்கு சிறந்த கடன் விதிமுறைகளை நீட்டிக்குமாறு உங்கள் சப்ளையர்களிடம் கேட்கலாம்.

**வாடிக்கையாளர்களுடன் கடன் அபாயத்தை எடுத்துக்கொள்வது:** ஒவ்வொரு வாடிக்கையாளரின் கடன் தகுதியும் விசாரிக்கப்பட வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களின் கடன் குறிப்புகளைச் சரிபார்த்து செயல்பட வேண்டும்.

**பெறத்தக்க கணக்குகளை வைத்திருத்தல்:** உங்கள் பெறத்தக்க கணக்குகளின் நிலையை யாரேனும் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும். உண்மை என்னவென்றால், வாடிக்கையாளர்கள் எப்பொழுதும் சரியான நேரத்தில் பணம் செலுத்த மாட்டார்கள். மேலும் யாராவது அழைப்புகளைச் செய்ய வேண்டும் அல்லது கடந்த கால அறிவிப்புகளை அனுப்ப வேண்டும். அலுவலகத்தில் ஏற்கனவே இதைச் செய்யக் கூடிய பணியாளர் இல்லையென்றால், நீங்கள் ஒரு புதிய பணியாளரை நியமிக்க வேண்டியிருக்கும்.

**மோசமான கடன்கள் ஏற்பட வாய்ப்பு:** வாடிக்கையாளரின் கடன் மதிப்பீடு மற்றும் குறிப்புகளை நீங்கள் எவ்வளவு நன்றாகச் சரிபார்த்தாலும், இறுதியில், பணம் செலுத்தாத ஒருவர் இருப்பார். அது நிகழும்போது, கணக்கை வசூல் நிறுவனத்திடம் ஒப்படைத்தால், கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். வசூல் முயற்சிகள் பலனளிக்கவில்லை என்றால், நீங்கள் பெறத்தக்க கடனாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்.



LIC HFL

LIC HOUSING FINANCE LTD


திருமதி. R.M.திலகவதி

செல்: 98426 76174, 96006 76174

E-mail: thilaga4464@gmail.com


# HOUSING LOAN

## எல்.ஐ.சி. ஹவுசிங் பைனான்ஸ் மூலம் கடன் பெறுவதற்கு அணுகவும்

| | |
|---|---|
| வீடு | வீடு கட்டுவதற்கு, வாங்குவதற்கு, விரிவாக்கத்திற்கு, புதுப்பிப்பதற்கு, அடமானத்திற்கு கடன் பெறலாம். வேறு நிறுவனங்களில் வாங்கிய கடனை மாற்றி கூடுதல் கடன் பெறலாம். |
| மருத்துவமனை | மருத்துவனை புதிதாக கட்டவும், ஏற்கனவே உள்ளவற்றை புதுப்பித்தலுடன் மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கும் கடன் பெறலாம். |
| அலுவலகம் | புதிதாக கட்டவும், விரிவுபடுத்தவும் கடன் பெறலாம். |
| வணிக வளாகம் | தங்களது கட்டிடத்தில் உள்ள நிறுவனங்களின் மாத வாடகை அடிப்படையில் ... திட்டத்தின் மூலம் கடன் பெறலாம். |

## LIC HFL - கடன் பெற பொருத்தமானவர்கள்

- மாத சம்பளம் PF பிடித்தபின் வங்கி மூலம் பெறுபவர்கள்
- ஓய்வூதியம் (Pension) பெறுபவர்கள்
- கடந்த மூன்று வருட வருமானவரி கணக்கினை அந்தந்த வருடங்களில் தாக்கல் செய்த வணிகர்கள் மற்றும் சுய தொழில் செய்பவர்கள்
- வெளிநாட்டில் பணி புரிபவர்கள். (மாத சம்பளம் அங்குள்ள வங்கி மூலம் பெற வேண்டும்)



## 15ம் ஆண்டு பொதுக்குழு கூட்ட அறிவிப்பு

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் **பொதுக்குழு கூட்டம்** வருகின்ற **25.09.2022** (ஞாயிற்றுகிழமை) அன்று **காலை 10 மணிக்கு** நமது **ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அரங்கில்** நடைபெற இருக்கிறது.

கூட்டத்தின் அறிவிப்பு தங்களுக்கு ஏற்கனவே அஞ்சல் வழியாகவும், வாட்ஸ்ஆப் வழியாகவும் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது மீண்டும் ஒரு இதழின் வழியாக நினைவூட்டுகிறோம்.

இந்தக் கூட்டத்தில் முக்கியமாக, 2022-24 ஆண்டின் புதிய நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளது.

அங்கத்தினர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று அழைக்கிறோம். மதிய உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(பதிவு எண்: 26/2007)

### ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

136, கீழ வெளி வீதி, 2வது மாடி, தனிட்நேர்சந்தை, மதுரை - 625 001.
போன்: 282 99 55, 9344197952, மின்னஞ்சல்: sourashtra.chamber@gmail.com
இணையதள முகவரி: www.sourashtrachamber.org

பெறுநர்: | தேதி: 03.09.2022
அனைத்து உறுப்பினர்கள்

**15ம் ஆண்டு பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பு**

நமது சேம்பரின் **பதினைந்தாம் ஆண்டு பொதுக்குழு கூட்டம்** வருகின்ற 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் நாள் ஞாயிற்றுகிழமை காலை 10.00 மணிக்கு மதுரை, கீழ வெளி வீதியில் உள்ள **ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்** A/C **அரங்கத்தில்** நடைபெற உள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். அவ்வமயம் கீழ்கண்ட விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்படும்.

1. 31.3.2022-ம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்குழுவின் அறிக்கையும், தணிக்கையாளர் அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பெற்ற வரவு-செலவு கணக்குகளை அங்கீகரித்தல்.
2. 2022-23 ஆம் ஆண்டிற்கு தணிக்கையாளரை நியமித்து அவரது கட்டணத்தை நிர்ணயித்தல்.
3. 31.03.2022 வரை உள்ள அங்கத்தினர்கள் பட்டியல் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல்.
4. 2022-2024ம் ஆண்டிற்கான இருபத்தி நான்கு (24) செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்
5. தேர்ந்தெடுக்கப்பட்ட இருபத்தி நான்கு (24) செயற்குழு உறுப்பினர்கள், கீழ்காணும் பதவிகளுக்கு நிர்வாகிகளை தேர்ந்தெடுத்தல் (2022-2024)
   - அ. தலைவர்
   - ஆ. துணைத் தலைவர்
   - இ. பொதுச் செயலாளர்
   - ஈ. இரண்டு இணைச் செயலாளர்கள்
   - உ. பொருளாளர்
6. இதர விஷயங்கள் தலைவரின் அனுமதியுடன்.

**குமாரன் B. ஜகுவா** | K.K. **தினேஷ்**
தலைவர் | பொதுச் செயலாளர்

# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன்

# 15வது ஆண்டு விழா கொண்டாட்டம்

**நாள்: 01.10.2022 (சனிக்கிழமை)** **நேரம்: மாலை 06.01 மணி**

**இடம்: தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் – ஹட்சன் அரங்கம் A/C**
காமராஜர் சாலை, மதுரை – 625009

---

**Kumaran B Jaghuva** | **K.K. Dinesh**
*President, SCC* | *General Secretary, SCC*

**அட்டைப்பட விளக்கம்:** சாமானியர்களையும் சாதனையாளர்களாக நம் சேம்பர் மாற்றுவதற்கு இயங்கிக்கொண்டிருக்கிறது. வாருங்கள், இணையுங்கள்... மேன்மையடைவோம்!...

# வாடிக்கையாளர் புகார்களைக் கையாளும் முறை

வாடிக்கையாளர் புகார்களை விரைவாக நிர்வகித்தல் மற்றும் தீர்ப்பது உங்கள் வணிக நற்பெயரையும் செயல்முறைகளையும் மேம்படுத்தும். சில கட்டத்தில் உங்கள் வணிகம் வாடிக்கையாளர் புகாரைப் பெற வாய்ப்புள்ளது. நேர்மறையான மற்றும் ஆக்கப்பூர்வமான முறையில் கையாள்வது உங்கள் வாடிக்கையாளர்களை வைத்திருக்க உதவும். பொதுவாக, உங்கள் தயாரிப்பு அல்லது சேவையில் மகிழ்ச்சியடையாத வாடிக்கையாளர்கள் உங்களிடம் புகார் செய்ய மாட்டார்கள். ஆனால் அவர்கள் மற்றவர்களிடம் புகார் செய்து தங்கள் வணிகத்தை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வார்கள். வாடிக்கையாளர் புகார்களை நிர்வகித்தல் மற்றும் அவற்றை விரைவாகத் தீர்ப்பதன் மூலம் மேம்பட்ட வணிக செயல்முறைகள் மற்றும் மீண்டும் வணிகம் ஏற்படும்.

இதற்கு, புகார்களைக் கையாளும் கொள்கையை உருவாக்க வேண்டும். அதில் வாடிக்கையாளர்களின் கருத்துக்கு நீங்கள் மதிப்பளிக்கிறீர்கள் என்பதையும், அவர்களின் பிரச்சினைகளை நியாயமான, சரியான நேரத்தில் மற்றும் திறமையான முறையில் தீர்க்க நீங்கள் உறுதிபூண்டுள்ளீர்கள் என்பதையும் உறுதிப்படுத்துவது இதில் அடங்கும். மேலும், வாடிக்கையாளர்கள் முறையான புகாரை எவ்வாறு செய்யலாம் என்பதையும் விளக்கவும். புகார்களை விவாதித்தல், நிவர்த்தி செய்தல் மற்றும் தீர்ப்பதில் நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை அடையாளம் காணவும், புகார்களைத் தீர்க்க நீங்கள் வழங்கும் சில தீர்வுகளைக் குறிப்பிடவும், தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான உங்கள் உறுதிப்பாட்டை வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்கலாம்.

மேற்படி கொள்கையை உருவாக்கியப்பிறகு, புகார்களைக் கையாள்வதற்கான நடைமுறையை உருவாக்கலாம். ஒவ்வொரு முறையும் புகார்கள் ஒரே மாதிரியாக கையாளப்படுவதை ஒரு நடைமுறை உறுதி செய்யும். உங்கள் அனைத்து ஊழியர்களும் புரிந்துகொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் செயல்முறை எளிதாக இருக்க வேண்டும். உங்கள் செயல்முறை பின்வரும் படிகளை உள்ளடக்கியிருக்கலாம்.

- விஷயத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்ததற்காக வாடிக்கையாளருக்கு நன்றி, மன்னிப்பு கேட்டு உரிமையை ஏற்கவும். மற்றவர்களைக் குறை கூறாதீர்கள் மற்றும் மரியாதையுடன் இருங்கள்.
- புகாரை விரிவாகப் பார்க்கவும். இதன் மூலம் பிரச்சனை என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். அனைத்து புகார்களின் பதிவுகளையும் ஒரே மைய இடத்தில் வைத்திருங்கள் அல்லது பதிவு செய்யுங்கள். இது ஏதேனும் போக்குகள் அல்லது சிக்கல்களைக் கண்டறிய உதவும்.
- புகாரின் விவரங்களை சரியாகப் புரிந்துகொண்டு பதிவு செய்துள்ளீர்களா என்பதைச் சரிபார்க்கவும். தேவைப்பட்டால் கேள்விகளைக் கேளுங்கள்.
- வாடிக்கையாளரிடம் அவர்கள் என்ன பதிலைத் தேடுகிறார்கள் என்று கேளுங்கள். அது பழுது, மாற்றுதல், பணத்தைத் திரும்பப் பெறுதல் அல்லது மன்னிப்புக் கோரல், கோரிக்கை நியாயமானதா என்பதை முடிவு செய்யுங்கள்.
- புகாரை விரைவாக தீர்க்க வேண்டும். நீங்கள் நீண்ட நேரம் எடுத்துக் கொண்டால், அவை அதிகரிக்கும்.
- வாடிக்கையாளரின் கோரிக்கையைத் தீர்ப்பதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் அவருக்குத் தெரிவிக்கவும். உங்களால் வழங்க முடியாத விஷயங்களுக்கு வாக்குறுதி அளிக்காதீர்கள்.
- வாடிக்கையாளரின் புகார் எவ்வாறு கையாளப்பட்டது என்பதில் அவர்கள் திருப்தி அடைந்தார்களா என்பதைக் கண்டறிய அவரைத் தொடர்புகொள்ளவும். எதிர்காலத்தில் சிக்கலைத் தவிர்க்க நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

புகார்களைக் கையாளும் போது உங்கள் நடைமுறையைப் பின்பற்றுவதற்கு உங்கள் ஊழியர்கள் பயிற்சி பெற்றிருப்பதையும், முடிந்தவரை விரைவாகச் சிக்கல்களைத் தீர்க்கும் அதிகாரம் அவர்களிடம் இருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் வாடிக்கையாளர்களுக்கு கருத்து மற்றும் புகார்களை வழங்க ஊக்குவியுங்கள். இதனால் அவர்கள் ஒரு சிக்கல் இருக்கும்போது உங்களுக்குத் தெரியப்படுத்தவும், அதைத் தீர்ப்பதற்கான வாய்ப்பை உங்களுக்கு வழங்கவும் இயலும்.

முன்பு கூறியது போல, குறைகளை, மற்றவர்களிடம் புகார் செய்து தங்கள் வணிகத்தை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லும் வாய்ப்புகள் மேற்படி செயல்முறைகளால் குறையும்.



# நவீன மருத்துவமும் நம்பிக்கையும்

நாம் நாற்பது வயதை கடந்து விட்டாலே ரத்த ஓட்டம் குறையும். சர்க்கரை நோய் போன்ற பாதிப்பு மேலும் மூட்டு வலி, தோள்பட்டை வலி வந்துவிடுகிறது. நம் நாட்டில் நம் நாட்டில் நாற்பது வயது கடந்து விட்டாலே 7-ல் ஒருவருக்கு தோள்பட்டை வலி, 3-ல் ஒருவருக்கு முழுங்கால் வலி உள்ளது. மூட்டின் நீர் சுரப்பிகளில் புண் ஏற்பட்டு வலி வந்துவிடுகிறது.

புண் வலி ஆரம்ப காலத்தில் கண்டறிந்தால் மருந்து மற்றும் பிசியோதெரபி மூலம் குணமாக்கலாம். தொடர்ந்து வலி இருந்தால் அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். சிலருக்கு தோள்பட்டை எலும்பு இயற்கையாகவே வளைந்து இருக்கலாம். இதன் காரணமாக தீராத வலி இருக்கலாம். அதை சரி செய்ய மருந்து இல்லை. அறுவை சிகிச்சை தான். தற்போது வளர்ந்த தொழில்நுட்பம் திறக்காமலே செய்ய முடியும். தற்சமயம் அதிநவீன நுண்துளை சிகிச்சை மூலம் சிறு துவாரம் அல்லது சிறிதாக திறந்து அறுவை சிகிச்சை முறை செய்யப்படுகிறது.

மூட்டுகளில் எந்த இடத்திலும் பிரச்சனைகள் இருந்தாலும் கேமிரா மூலம் தெளிவாக கண்டறிந்து சிறப்பான சிகிச்சை செய்யலாம். ஒரேநாளில் சிகிச்சை முடித்து வீடு திரும்பலாம். ஓரிரு வாரத்தில் வழக்கமான பணிகளில் தொடரலாம். வலியும் மிககுறைவு, ரத்த கசிவும் இல்லை. அறுவை சிகிச்சை என்றாலே அதிக வலி இருக்கும். என்னும் எண்ணத்திற்கு பெரிய முற்றுப்புள்ளி மேலும் விபத்துக்களில் தோள்பட்டை விலகி சிகிச்சை பெற்று விலகலாம் இருக்க நுண்துறை சிகிச்சை முக்கிய பங்கு வகுக்கிறது.

இதே போல முழங்கால் மூட்டில் அடிபட்டு நேராக நடக்கும் போதும் திரும்பும் போதும் கீழே விழுவது போல் உணர்வு ஏற்பட்டால் மூட்டில் உள்ள இணைப்பு ஜவ்வு அறுந்து இருக்கலாம். இவ்வாறு உள்ளவர்களுக்கு மூட்டின் தேய்மானம் அதிகமாக ஏற்பட வாய்ப்புண்டு. இவர்களுக்கு திறந்தவெளி சிகிச்சை செய்யும் அவசியம் இல்லை. எளிதாக மூட்டு நுண்துளை சிகிச்சையில் நன்றாக குணமாக்க முடியும். மூட்டு தேய்மானத்திற்கு மூட்டு மாற்று சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது. மிக மோசமாக மூட்டு தேய்மானம் உள்ளவர்களுக்கு மட்டும் மூட்டு மாற்று சிகிச்சை மேற்கொண்டாலே போதும். ஆரம்ப கட்டத்தில் உள்ளவர்கள் மருந்து வகைகளிலும், நவீன பிசியோதெரபி முறையிலும், தற்போது நவீன முறையிலும் செய்யப்படும் மூட்டை பாதுகாக்கும் சிகிச்சையில் குணமடையலாம்.

தற்போது இயற்கையாகவே ஜவ்வை வளர வைக்க வேண்டும் என்பதற்காக ஆய்வை மேற்கொண்டு வருகிறேன். நோயாளிகள் வலி இல்லாமல் சிகிச்சை முடிந்து செல்ல வேண்டும். நுண்துறை சிகிச்சை நிபுணர்கள் நம் நாட்டில் குறைவு.

போதிய வசதிகள் உள்ள மருத்துவனைகள் குறைவு. இதனால் நம் மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாமல் உள்ளது. இதே போன்று மூட்டு மாற்று சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு மிக நவீன தொழில் நுட்பம் மேற்கொண்டு பல வருடங்கள் மூட்டுவலியே இல்லாமல் இருக்கலாம் என்கிற விழிப்புணர்வு மக்களிடம் குறைவாகவே உள்ளது.

**நோய் வருமுன் காப்பான் புத்திசாலி:** நவீன மருத்துவத்தில் நோயே குணமாக்கும் பல புதிய தொழில்நுட்பம் இருந்தாலும் நான் மிக்க ஆவலுடன் செல்ல விரும்புவது ........ - *அடுத்த இதழில் தொடரும்.....*

– Dr. K.N. சுப்பிரமணியன்
MBBS., M.S., MRCS Ed, M.Ch. Orth, FRCS(Tr & Orth), CCT Orth(GMC-UK)
முதன்மை எலும்பு முறிவு, நுண்துளை மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்
வேல் மருத்துவமனை,மதுரை.

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

Cell: 90805 54802, 99424 90217
Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# வணிக சர்ச்சையை எவ்வாறு நிர்வகிப்பது?

ஒரு வணிக உரிமையாளராக இருப்பதன் இன்றியமையாத பகுதி பிரச்சனைகளை எவ்வாறு சிறப்பாகச் சமாளிப்பது என்பதைப் புரிந்துகொள்வது.

பல சிக்கல்களை பொது அறிவு மூலம் கையாளலாம். இருப்பினும் சிறிய பிரச்சனைகள் சில சமயங்களில் தகராறுகளாக மாறலாம். பெரும்பாலும் ஒரு சர்ச்சையைத் தீர்ப்பதில் மிகவும் விளையுயர்ந்த பகுதி, உங்கள் வணிகத்தை நடத்துவதற்குப் பதிலாக அதைக் கையாளும் நேரமாகும். நீங்கள் தகராறில் இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை கீழே உள்ள படிகள் விளக்குகின்றன.

வாடிக்கையாளர், சப்ளையர், பணியாளர், குத்தகைதாரர் அல்லது நில உரிமையாளர் அல்லது அரசு நிறுவனத்துடன் நீங்கள் முரண்படலாம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் சர்ச்சையை எவ்வாறு நிர்வகிப்பது என்பது மாறுபடலாம். இருப்பினும் சிக்கலைக் கையாளவும் நல்ல வணிக உறவுகளைப் பேணவும் நீங்கள் பின்பற்றக்கூடிய சில முக்கியப் படிகள் உள்ளன.

தகராறு எப்படி ஏற்பட்டது என்பதை சரியாகக் கவனியுங்கள். சர்ச்சைக்கு வழிவகுக்கும் நிகழ்வுகளை பட்டியலிட்டு, முக்கியவற்றை முன்னிலைப்படுத்தவும், நீங்கள் தீர்க்க விரும்பும் சிக்கல்களின் விவரங்களையும் சேர்க்கவும்.

உங்களிடம் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் இருந்தால், ஒவ்வொரு தரப்பினரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைத் தெளிவாக புரிந்து கொள்ள கவனமாக படிக்கவும். ஒப்பந்தத்தில் பின்பற்றப்பட வேண்டிய ஒரு குறிப்பிட்ட தகராறு தீர்க்கும் செயல்முறை தொடர்பான ஷரத்து இருக்கலாம். மின்னஞ்சல்கள், விவரக்குறிப்புகள் மற்றும் பொருட்கள் மற்றும் காலவரையறைகளின் விவரங்களுடன் மேற்கோள்கள் போன்ற ஆவணங்கள் ஆதரிக்கும் வாய்மொழி ஒப்பந்தத்தின் ஆதாரத்தைக் காட்டலாம்.

தவறான புரிதல்களால் பல சர்ச்சைகள் எழுகின்றன. மற்ற தரப்பினருடனான உரையாடல் சிக்கலை தெளிவுபடுத்தலாம் மற்றும் தீர்வுக்கு வழிவகுக்கும். ஒரு சிறிய பிரச்சினையை தொலைபேசி உரையாடல் மூலம் கையாள முடியும் என்றாலும், மிகவும் சிக்கலான விஷயங்கள் பெரும்பாலும் நேருக்கு நேர் சந்திப்பில் சிறப்பாக கையாளப்படுகின்றன.

மற்ற தரப்பினருடன் பழகும்போது நினைவில் கொள்ள வேண்டிய புள்ளிகள்:

- நீங்கள் தொடர்பு கொள்ளும் நபருக்கு சர்ச்சையைத் தீர்ப்பதற்கான அதிகாரம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.




- உங்கள் பேச்சு அல்லது எழுதப்பட்ட தகவல் தொடர்புகளில் எப்போதும் அமைதியாகவும், கண்ணியமாகவும், தொழில்முறையாகவும் இருங்கள்.
- துஷ்பிரயோகம் அல்லது உணர்ச்சிவசப்பட்ட மொழி அல்லது பழி சுமத்துவதைத் தவிர்க்கவம்.
- நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று திட்டமிடுங்கள். உங்கள் கவலைகளை முடிந்தவரை தெளிவாகக் குறிப்பிடவும்.
- நீங்கள் நிலைமையை விரைவாகவும், தொழில் ரீதியாகவும் தீர்க்க விரும்புகிறீர்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.
- மற்ற தரப்பினரின் பார்வையில் இருந்து நிலைமையை புரிந்துகொள்ள முயற்சிக்கவும்.
- மற்ற தரப்பினருடன் கலந்துரையாடலுக்கான சாத்தியமான தீர்வுகளின் பட்டியலை உருவாக்கவும் – யதார்த்தமாக இருங்கள் மற்றும் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருங்கள்.
- ஒரு குறிப்பிட்ட தீர்வை அடைவது (அல்லது அதை அடையாமல் இருப்பது) உங்கள் வணிகத்தில் – குறிப்பாக நேரம், பணம் மற்றும் எதிர்கால வேலை உறவுகளை எவ்வாறு பாதிக்கும் என்பதைக் கவனியுங்கள்.
- மற்ற தரப்பினர் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள் – உங்கள் நிலைப்பாட்டிற்கும் அவர்களின் நிலைப்பாட்டிற்கும் இடையே உள்ள வித்தியாசம் நீங்கள் முதலில் நினைத்தது போல் குறிப்பிடத்தக்கதாக இல்லை.
- உங்கள் வணிக உறவை மீட்டெடுக்கும் … தீர்வைத் தேடுங்கள். மற்ற தரப்பினருடன் விவாதிக்க யதார்த்தமான தீர்வுகளின் பட்டியலை உருவாக்கவும்.
- மற்ற தரப்பினருடனான கலந்துரையாடலுக்குப் பிறகு தெளிவான குறிப்புகளை உருவாக்கவும் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவுகளை பதிவு செய்யவும்.

மற்ற தரப்பினருடன் பேசுவது வேலை செய்யவில்லை

என்றால், அடுத்த கட்டம் உங்கள் கவலைகள் மற்றும் நீங்கள் விரும்பும் முடிவை ஒரு கண்ணியமான, தொழில்முறை கடிதத்தில் தெரிவிக்க வேண்டும். ஒரு கடிதம் இரண்டு நோக்கங்களுக்கு உதவுகிறது. மேலும் நடவடிக்கை எடுப்பதற்கு முன், சர்ச்சையைத் தீர்ப்பதற்கான வாய்ப்பை மற்ற தரப்பினருக்கு வழங்குகிறது. மேலும் நீங்கள் சர்ச்சையைத் தீர்க்க முயற்சித்தீர்கள் என்பதற்கான ஆதாரத்தை இது வழங்குகிறது. நீங்கள் மற்ற தீர்மானங்களை பயன்படுத்த வேண்டும் என்றால் இது தேவைப்படலாம்.

கடிதத்தை அனுப்பும்போது, ஏதேனும் தொடர்புடைய ஆவணங்களின் நகல்களை இணைக்கவும். உங்கள் ஒப்பந்தத்தின் நகல், மின்னஞ்சல்கள், விவரக்குறிப்புகளின் பட்டியல், மேற்கோள்கள், விலைப்பட்டியல்கள் அல்லது உங்கள் கவலைக்குரிய பகுதிகளைக் கோடிட்டுக் காட்டும் பிற ஆவணங்கள் போன்றவை எல்லா கடிதங்களின் நகலையும் வைத்திருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

மற்ற தரப்பினரிடம் பேசி, கடிதம் எழுதிய பிறகும் உங்களால் சர்ச்சையைத் தீர்க்க முடியவில்லை என்றால், மூன்றாம் தரப்பினரின் உதவி உங்களுக்குத் தேவைப்படலாம். வழக்கு விசாரணையில் கவனமாக இருக்கவும். பேச்சுவார்த்தை மற்றும் மத்தியஸ்தம் போன்ற சர்ச்சையைத் தீர்க்க மாற்று முறையைப் பயன்படுத்தவும்.

